

சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கழக இளைஞரணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு அண்ணாநகர் வடக்கு பகுதியில் மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு தலைமையில் 08.1.2025 அன்று – நடந்த மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் மாண்புமிகு அன்பில் மகேஸ் பொய்யாமொழி பங்கேற்று சிறப்புரையாற்றி நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இதில் கழக விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் தயாநிதி மாறன், எம்.பி., தலைமை செயற்குழு உறுப்பினர் எம்.கே.மோகன், எம்.எல்.ஏ., தலைமைக் கழக செய்தி தொடர்புக்குழு இணைச் செயலாளர் தமிழன் பிரசன்னா ஆகியோர் உரையாற்றினார்கள். அண்ணாநகர் வடக்கு பகுதி செயலாளர் ச.பரமசிவம், அண்ணாநகர் தெற்கு பகுதி செயலாளர் ந.இராமலிங்கம் ஆகியோர் வரவேற்புரையாற்றினர். இதில் மாவட்ட நிர்வாகிகள் து.விக்டர், ஆர்.என்.துரை, வி.எஸ்.கலை, ஆ.சங்கீதா, ஜெ.ஜெஸ்.அகஸ்டின் பாபு, ஐ.கென்னடி, கார்த்திக் மோகன், பகுதி செயலாளர்கள், மாநில நிர்வாகிகள், தலைமை செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள், சென்னை மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட மாவட்ட / பகுதி / வட்ட அணிகளின் அமைப்பாளர்கள், தலைவர், துணைத் தலைவர், துணை அமைப்பாளர்கள், வட்டக்கழக செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், மாமன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள், பொதுமக்கள் என அனைவரும் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



2026 சட்டமன்ற தேர்தல் முன்னிட்டு திருவள்ளூர் மேற்கு மாவட்டம் திருவாலங்காடு கிழக்கு ஒன்றியம் திருவலங்காடு பேருந்து நிலையம் அருகில் மாவட்ட பொறியாளர் அணி சார்பில் தெருமுனைப் பிரச்சாரம் ஒன்றிய கழகச் செயலாளர் எஸ்.மகாலிங்கம், முன்னிலையில் மாவட்ட அமைப்பாளர் சி.சு. விஜயகுமார், ஏற்பாட்டில் நடைபெற்றது. இதில் மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. கலந்துகொண்டு பொதுமக்களிடம் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையில் நடைபெற்று வரும் திராவிட மாடலரசின் சாதனைகளை பொதுமக்களிடம் எடுத்து கூறி துண்டு பிரசுரம் வழங்கினார். உடன் தொகுதி பார்வையாளர் மாஸ்டர் சேகர், சி.ஜெயபாரதி, வழக்கறிஞர் ஆர்.ராஜா, எஸ்.சண்முகம், ஏ.பி.செந்தில்குமார், நீலாவதிசீனிவாசன், வி.ஜெகதீசன், தி.நந்தகுமார், டில்லிபாபு, மூர்த்தி,செல்வம், கலைவாணன் லோகேஷ், சி.எஸ்.முனிகிருஷ்ணன், நாகராஜ்,ஏழுமலை, தியாகராஜன், ஹரி பாபு, ராகுல், எம். பார்த்திபன், உள்பட கழக நிர்வாகிகள் பொதுமக்கள் பலர் உள்ளனர்.

### வட்டச் செயலாளர் கே.பி.சுந்தரேசன் ஏற்பாட்டில் –

# புழல் 24வது வட்டத்தில் சமத்துவப் பொங்கல் விழா! கழகத்தினருக்குப் புத்தாடை!

## மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. – ஜி.துக்காராம் – ஜி.நந்தகோபால் வழங்குகின்றனர்!

சென்னை,ஜன.10-

புழல் 24வது வட்டக் கழகம் சார்பில் சமத்துவப் பொங்கல் விழா மற்றும் கழக மூத்த முன்னோடிகளுக்கு புத்தாடைகள் வழங்கும் விழாவில் 24வது வட்டக் கழகத்தினர் திரளாக பங்கேற்குமாறு வட்டக் கழகச் செயலாளர் கே.பி.சுந்தரேசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

புழல் 24வது வட்டக் கழகம் சார்பில் 14.1.2025 செவ்வாய்க்கிழமை காலை 10 மணி அளவில் ஜி.என்.டி. சாலையில் அமைந்துள்ள எம்.ஏ. கிராண்ட் மண்டபத்தில் சமத்துவப் பொங்கல் விழாவை முன்னிட்டு கழகத்தின் மூத்த முன்னோடிகளுக்கு புத்தாடை வழங்கி கௌரவிக்கும் பொங்கல் விழா வட்ட செயலாளர் கே.பி. சுந்தரேசன் ஏற்பாட்டில் - தலைமையில், வட்ட நிர்வாகிகள் சி.ஜே.ரவி, என் எழில் ராவணன், எம்.அந்தோணி, மலர்க்கொடி, செல்வராஜ், ஏ.ஜெயகர், பி.எஸ்.என்.எல்.நாகராஜ், கே.பி.பி.அறிவழகன், எம். கௌதமன், எம்.உதயப் பாரி மற்றும் கழக உடன் பிறப்புகள் முன்னிலையில் நடைபெறுகிறது.

இவ்விழாவில் பொங்கல் புத்தாடையினை சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளரும் மாதவரம் சட்டமன்ற உறுப்பினருமான மாதவரம் எஸ்.சுதர்சனம் கலந்து கொணடு வழங்குகிறார்.

இதில் மாதவரம் தெற்கு பகுதி செயலாளர் ஜி.துக்காராம் மண்டல குழு தலைவர் எஸ். நந்த கோபால், சிறப்பு அழைப் பாளர்களாக கலந்து கொண்டு விழாவை சிறப் பிக்க இருக்கிறார்கள்.

ஆகவே கழகத்தின் முன்னோடிகள், கழகத் தோழர்கள் நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு 24 வது வட்டக் கழகச் செயலாளர் கே.பி.சுந்தரேசன் கேட்டுக்கொண்டுள்ளார்.

### தமிழ்நாடு முதல்வர் தலைமையில் நடைபெறும்

# திராவிட மாடல் அரசின் பல்வேறு நலன் திட்டங்களால் தமிழ்நாட்டில் மக்கள் தலை நிமிர்ந்து நிற்கிறார்கள்!

## அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் பேச்சு.!

திருவள்ளூர் ஜன. 10

திருவள்ளூர் மத்திய மாவட்ட திமுக வர்த்தக அணி சார்பில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் ஏ.ஜெ.பவுல் ஏற்பாட்டில் நகரச் செயலாளர் என்.இ. கே.மூர்த்தி முன்னிலையில் திருவேற்காடு அடுத்த கீழ் அயனம்பாக்கத்தில் நடைபெற்றது இதில் மாவட்ட கழக செயலாளர் தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் இலவச மிதிவண்டி ஆயிரம் பெண்களுக்கு புடவை விளையாட்டு உபகரணங்கள் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரை ஆற்றினார்

அப்போது அமைச்சர் பேசுகையில்

கழகத் தலைவர் அன்பு தளபதி மு க ஸ்டாலின் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பின், நேரே கோட்டைக்குச் சென்று முதலமைச்சர் நாற்காலியில் அமர்ந்தவுடன் தமிழ்நாட்டு மக்களுக்கு அளித்த தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றத் தொடங்கி, “விடியல் பயணத் திட்டம்” கொரோனா நிவாரண உதவித் தொகை ரூ.4,000/வழங்கும் திட்டம், முதல்வரின் முகவரித்துறை உருவாக்கும் திட்டம், பால் விலை லிட்டருக்கு 3 குறைப்புத் திட்டம், பெட்ரோல் விலை லிட்டருக்கு 3 குறைப்புத் திட்டம் ஆகிய 5 கோப்புகளில் முதன் முதல் ஆணைகள் பிறப்பித்து, நிறைவேற்றி, “சொன்னதைச் செய்வோம் செய்வதைச் சொல்வோம்” என்பதுடன், “சொல்லாததையும் செய்வோம்” எனக் கூறி மக்களுக்கு மகிழ்ச்சியையும் நம்பிக்கையையும் வழங்கினார்.

காலை உணவுத் திட்டம் இந்தியாவைக் கடந்து வெளி நாடுகளிலும் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது

இல்லத்தரசிகளுக்கு மாதம் ரூ.1,000 வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்

இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதற்கான ஒப்பந்தங்கள் நடைபெற்று இதுவரை தொழில் வளர்ச்சி வரலாற்றில் இல்லாத ஒரு மாபெரும் புரட்சி நிகழ்த்தப்பட்டுள்ளது.

இளைஞர்கள், பெண்கள், மாற்றுத்திறனாளிகள், விளிம்புநிலை மக்கள், ஒடுக்கப்பட்டோர் ஆகியோர் அனைவரும் மகிழ்ச்சி அடைந்து, தங்களது வாழ்க்கைத்தரம் உயர்ந்து இருப்பதுதான் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகள்

முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் படைத்துவரும் சாதனைகள்

தமிழ்நாட்டு மக்களால் போற்றிப் பாராட்டப்படுகின்றன. இந்தியாவின் மற்ற மாநிலங்களின் தலைவர்களும் முதல்அமைச்சரின் திட்டங்களை அறிந்து வியந்து அவற்றைத் தத்தம் மாநிலங்களில் செயல்படுத்திடவும் முனைப்புடன் ஆர்வம் காட்டி வருகிறார்கள்.

அதுமட்டுமல்லாமல் தமிழ்நாடு துணை முதலமைச்சர் பல்வேறு சர்வதேச விளையாட்டு போட்டிகளை நடத்தி தமிழ்நாட்டிற்கு பெருமை சேர்த்து உள்ளனர் என அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தெரிவித்துகொண்டார்

இந்நிகழ்ச்சியில் தலைமை கழக பேச்சாளர் திருவெற்றியூர் கருணாநிதி, யாசர் அராபத், மாநில மாவட்ட கழக நிர்வாகிகள் கே.ஜெ.ரமேஷ், பிரபு கஜேந்திரன், சி.ஜெரால்டு, எஸ். ஜெயபாலன், காயத்திரி ஸ்ரீதர், ஆவடி மேயர் ஜி.உதயகுமார், நகரக் கழக நிர்வாகிகள் எஸ்.சங்கர், ஏ.சி.தெய்வசிகாமணி, மா.வினாயகம், ஐ.ஜேக்கப், குமாரசாமி, நடராஜன், பானு அரசு, ஏ.இ.செல்வதுரை, சத்தியகிரி, சாது, , மாவட்ட வர்த்தக அணி நிர்வாகிகள் கனகராஜ், எம். ராம்பாபு, தாமோதரன், எச்.சாபி, டி.மூர்த்தி, கே.மூர்த்தி, முரளி கிருஷ்ணன்,துரை கோபால் பரிசமுத்து, பொன் மனோகரன், விக்னேஸ்வரன், சாந்திராஜா, ருக்மணி பவுல், நாராயணன் , என்.ராஜி, ஏ.பி.ஜி. சக்கரவர்த்தி, பரந்தாமன், முருகன், செந்தில்குமார், வெங்கடேசன், தியாகராஜன், சுந்தரவேல், உள்பட பலர் கலந்து கொண்டனர்

முடிவில் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ஏ.டி.பிரியா குமார், மாவட்ட விளையாட்டு அணி துணை அமைப்பாளர் விஜய சாரதி ஆகியோர் நன்றி கூறினார்கள்.

### ஒன்றியச் செயலாளர் தங்கம் முரளி தலைமையில்

# எல்லாபுரம் மத்திய ஒன்றிய தி.மு.க. சார்பில் பொதுக்கூட்டம்!

## அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் நலத்திட்ட உதவி வழங்கி சிறப்புரை!

## தாயகம் கவி எம்.எல்.ஏ. ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ, பங்கேற்பு.!

திருவள்ளூர் ஜன 10;

திருவள்ளூர் மத்திய மாவட்டம், எல்லாபுரம் மத்திய ஒன்றிய திமுக சார்பில் தமிழக துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு தாமரைப்பாக்கம் அடுத்த கொமக்கம்பேடு ஊராட்சி பகுதியில் பொதுக்கூட்டம் மற்றும்1000 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா ஒன்றிய செயலாளர் கோடுவெளி தங்கம்முரளி தலைமையில் நடைபெற்றது இதில் ஆளவந்தான், தங்கராஜ், தரணி ரவி ஆகியோர் வரவேற்றார். மாவட்ட துணை செயலாளர் வெங்கல் வி.ஜே.சீனிவாசன், நிர்வாகிகள் பி.ஜி. முனுசாமி, எம்.குமார், இ.சுப்பிரமணி, வி. நாகலிங்கம், உமா சீனிவாசன், லோகநாதன், வெங்கல் ஜி,பாஸ்கர், டி.பாஸ்கர், கே.ஜி.அன்பு, ஸ்ரீதர், நாராயணசாமி, சீனிவாசன், சுப்பிரமணி, வெங்கடேஸ்வரி, ருக்மாங்கதன், சரவணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்கள்

சிறப்பு அழைப்பாளர்களாக சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார் பேசிய அமைச்சர் சா.மு. நாசர்

தமிழ்நாடு சட்டப்பேரவையில் தமிழ் தாய் வாழ்த்தை அவமதித்த ஆளுநர் ஆர்.என்.ரவி தொடர்ந்து தமிழ் மொழியும் தமிழ பண்புகள் அவமதித்து வருகிறார் தமிழ்நாட்டில் திராவிட மாடல் ஆட்சி இருக்கும் வரை தமிழ் மொழியை எந்த கொம்பனாலும் அசைத்துக் கூடப் பார்க்க முடியாது என்றும், பாஜகவுடன் அதிமுக கள்ளக் கூட்டணி வைத்துக் கொண்டு நாடகம் ஆடி வருகின்றனர்.

இதனை தமிழக மக்கள் கவனித்து வருவதாகவும், அவர்களுக்கு 2026.ஆம் ஆண்டு தகுந்த பாடம் கற்பிப்பார் என்று சாடினார். மேலும் அவர் பேசுகையில் தமிழக முழுவதும் மகளிருக்கான இலவச பேருந்தில் பயணம் செய்தவர் எண்ணிக்கை 571 கோடி பேர், இதன் மூலம் அரசுக்கு .6,800 கோடி வருவாய் இழப்பு என்றும், உயர் கல்வியில் பயிலும் பெண்களுக்கு புதுமைப் பெண் திட்டத்தின் கீழ் 3லட்சத்து 28,000 பேருக்கு திராவிட மாடல் ஆட்சி மாதந்தோறும் .1000 வழங்கி வருகிறது.நான் முதல்வன் திட்டத்தின் மூலம் சுமார் 3 லட்சத்து 28 ஆயிரம் மாணவர்கள் பயனடைந்துள்ளனர், மாதந்தோறும் .1000 ஆரம்பப் பள்ளியில் பயிலும் ஏழை மாணவர்கள் பசியுடன் வந்து கல்வி பயிலக் கூடாது என்ற தாயுள்ளத்தோடு சிந்தித்து அவர்களுக்கு காலை சிற்றுண்டி திட்டத்தை செயல்படுத்தி வருபவர் நம் முதல்வர் என்றும், தமிழகத்தில் செயல்படுத்தும் அனைத்து முத்தான திட்டங்களை அண்டை மாநிலங்களும் திரும்பிப் பார்க்கும் அளவிற்கு நம் முதல்வர் திட்டங்களை செயல்படுத்தி வருகிறார் என்று அவர் தெரிவித்தார்

இதனை தொடர்ந்து கழக அமைப்பு துணைச் செயலாளர் தாயக கவி எம் எல்ஏ பூவிருந்தவல்லி சட்ட மன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ,தொகுதி பொறுப்பாளர் பிடிசி செல்வராஜ், தலைமை கழக பேச்சாளர் சாய் ரித்திக் சக்திவேல் சிறப்புரையாற்றினார்கள்.

இதில் மாவட்ட, ஒன்றிய நிர்வாகிகள் காயத்ரி ஸ்ரீதரன், த.எத்திராஜ், ப.ச. கமலேஷ், தண்டலம் என். கிருஷ்ணமூர்த்தி, காஞ்சனா முனுசாமி, சேகர், ரஜினி, அச்சுதன், கண்ணன், சரத்குமார், ரஞ்சித், டேவிட், ரகு, இளம் தென்றல், சூரியமுத்து, வாலீஸ்வரன், தமிழ் மூர்த்தி, பிரகாஷ், கோபிநாத், சார்லஸ், ரகு, செம்பேடு செல்வம், உட்பட பலர் கலந்து கொண்டனர். இளைஞர் அணி அமைப்பாளர் சரத்குமார் நன்றி கூறினார்.

### தை -1 தமிழ்ப் புத்தாண்டு - தமிழர் திருநாளை முன்னிட்டு

# மாங்காடு நகரத்தில் மாபெரும் கோலப் போட்டி - நலஉதவிகள் வழங்கல்!

## நகரச் செயலாளர் பட்டூர் எஸ்.ஜபருல்லா வேண்டுகோள்!

காஞ்சிபுரம், ஜன. 10 -

மாங்காடு நகரக் கழகச் செயலாளர் பட்டூர் எஸ். ஜபருல்லா விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், மாங்காடு நகர தி.மு.க. நடத்தும் தை-1 தமிழ்ப் புத்தாண்டு மற்றும் தமிழர் திருநாள் முன்னிட்டு 7 வது மற்றும் 8 வது வார்டுகளில் மாபெரும் கோலப்போட்டி 12-01-2025, ஞாயிற்றுக்கிழமை, காலை 6.00 மணி முதல் 8.00 மணிவரை, மாங்காடு, வசந்தபுரம் பகுதி முழுவதும் நடைபெறுகிறது.

இதில் வெற்றி பெறுபவர்களுக்கு முதல் பரிசு - பிரிட்ஜ், 2 ம் பரிசு - வாஷிங் மிஷின், 3 ம் பரிசு - கிரைண்டர், 4 ம் பரிசு - மிக்ஸி, 20 நபர்களுக்கு ஆறுதல் பரிசு மற்றும் பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது.

போட்டியின் விதிமுறைகளாக போட்டியாளர்கள் அவரவர் வீட்டு வாசலில் கோலமிட வேண்டும். குறைந்தபட்சம் 4க்கு / 4அடி அளவில் கோலம் இருக்க வேண்டும். போட்டியில் பங்கேற்க விருப்பமுள்ளவர்கள் 11-01-2025 சனிக்கிழமை இரவு 9.00 மணிக்குள் முன் பதிவு செய்ய வேண்டும்.

புள்ளி மற்றும் ரங்கோலி கோலத்திற்கு மட்டுமே அனுமதி உண்டு.நடுவரின் தீர்ப்பே இறுதியானது ஆகியன கடைபிடிப்படும். பரிசளிப்பு நிகழ்ச்சி 12-01-2025, ஞாயிற்றுக்கிழமை, மாலை 7.00 மணியளவில் வசந்தபுரம், ஆஞ்சநேயர் கோயில் அருகில் நடைபெறும். போட்டி குழுவினர்களாக தமிழ்ச் செல்வி, அஞ்சலி, எம்.ஆர். செந்தில், பிரகாஷ் ஆகியோர் செயல்படுவர்.

போட்டியை டி.பெருமாள்ராஜ் எம்.சி. ஒருங்கிணைக்கிறார். கே.ஜி.சங்கர், வி.பிரகாஷ், எம்.பிரபு ஆகியோர் அனைவரையும் வரவேற்கின்றனர்.

இவ்வாறு நகரக்கழகச் செயலாளர் பட்டூர் எஸ். ஜபருல்லா தெரிவித்துள்ளார்.




தமிழக முதல்வரின் பொங்கல் தொகுப்பு பரிசு சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் தெற்கு பகுதியில் 30 அ வட்டக் கழகத்தின் சார்பில் செங்குன்றம் சைதை கூட்டுறவு வர்த்தக நியாய விலை கடை உமாபதி நகர் செகட்ரியட் காலனி கல் பாளையம் நியாய விலை கடை உடும்பாட்டக்காரர்களுக்கு பொங்கல் பரிசு மாமன்ற உறுப்பினர் திருமலை துரைசாமி வட்டக் கழக செயலாளர் டி சுந்தரம் தொடங்கி வைத்தனர். உடன் இ.இராமன், ஏ.வி. முருகன், அபிப் ரகுமான், சீனிவாசன், கே.நரேந்திரன், உமா மகேஸ்வரி, பி.எஸ்.என்.எல். குமார், பி.எஸ்.என்.எல். தயாளன், சுசிலா, தியாகராஜன், ஆர். தனசேகர், ஜி.கஜேந்திரன், வி.டி. மூர்த்தி, டிவி ராஜு, கவி பிரியா, என். ராஜு, சக்கரபாணி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### ஏ.எம்.வி. பிரபாகர்ராஜா - க.தனசேகரன் - காசிமுத்துமாணிக்கம் - கே.கண்ணன் - உமாகாந்த் பங்கேற்பு

# 137 ஆ வட்ட கழக பாக முகவர்கள் - உறுப்பினர்கள் கூட்டம்!

## வட்டச் செயலாளர் அ.கதிரேசன் அறிவிப்பு

சென்னை, ஜன. 10 -

சென்னை தெற்கு மாவட்ட செயலாளரும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிர மணியன் ஆலோசனைப்படி

கலைஞர் நகர் தெற்கு பகுதி 137 ஆ வட்ட கழக பாக முகவர்கள் உறுப்பினர்கள்

கூட்டம் இன்று 10-01-.2025 அன்று மாலை 6 மணி அளவில் சூலை பள்ளம் நாகாத்தம்மன்

கோவில் மண்டபத்தில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்திற்கு வட்டக் கழக அவைத் தலைவர் என்.சக்கரவர்த்தி தலைமை தாங்குகிறார்.இக்கூட்டத்தில் விரும்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் பிரபாகராஜா, கணக்கு மற்றும் தணிக்கை குழு தலைவர் க.தனசேகரன், கலைஞர் நகர் தெற்கு பகுதி கழக செயலாளர் கே.கண்ணன்,விருகம்பாக்கம் தொகுதி பொறுப்பாளர் உமாகாந்த் ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனை தர உள்ளனர். இக்கூட்டத்திற்கு பாக தலைவர்கள் பாக உறுப்பினர்கள் மாவட்ட பிரதிநிதிகள் மாவட்ட அமைப்பாளர்கள் மாவட்ட துணை அமைப்பாளர் பகுதி கழக நிர்வாகிகள் வட்டக் கழக நிர்வாகிகள் அனைவரும் திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பு :- மாலை 6 மணி அளவில் பாக எண்கள் 147, 148,149, 150,151, 157,162,163, 164 ஆலோசனை கூட்டம் நடைபெறும் மாலை 7 மணி அளவில் பாக எண்கள் 146,152,153, 154,156,159,160,161,166 ஆலோசனை கூட்டம் நடைபெறும்

இவ்வாறு வட்டச் செயலாளர் அ.கதிரேசன் அறிவித்துள்ளார்.





சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. ஆலோசனையின்படி புழல் ஒன்றிய தீர்த்தக்கரையம்பட்டு ஊராட்சியில் அமைந்துள்ள நியாய விலை கடைகளில் புழல் ஒன்றிய பொறுப்பாளர் வழக்கறிஞர் ச.அற்புதராஜ் மற்றும் கழக நிர்வாகிகள் இ.பாஸ்கரன், ஆர். ஸ்டாலின், சியுவராஜ் ஏ டேவிட் நாவலன் ஜே.முருகன் டி.தேவதாஸ், விஜி, டி.ஆர்.அருண்குமார், என்தேவநாதன், சுரேஷ் ஏ.கஜபதி, டி டில்லி ரமேஷ், மாறன், எம்.ஜி.சுந்தராஜ், ஞானசேகரன், கருணாநிதி, கமலக்கண்ணன், கபிலன் மற்றும் திமுக கிளை கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு தமிழக அரசால் வழங்கப்படும் பொங்கல் பரிசு தொகுப்புகளான அரிசி, சர்க்கரை, கரும்பு, வேஷ்டி, சேலை உள்ளிட்ட தொகுப்பினை வழங்கி துவக்கி வைத்தனர்.